

விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் மல்லாங்கிணறு ராஜாமணி அம்மாள் திருமண மண்டபத்தில் திருச்சுழி ஒன்றிய செயலாளர் பொண்ணு தம்பி தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சிறப்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கையில் நடைபெற்ற உலக மாற்றுத் திறனாளிகள் நலவிழாவில் மாற்று திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் எம்.எல்.ஏ.க்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் , எஸ்.மாங்குடி, மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி , சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த் ஆகியோர் உள்ளனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சக்கிமங்கலம் கிராமத்தில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான கட்டுமான பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், தலைமை கழக வழக்கறிஞர் கலாநிதி, ஒன்றிய செயலாளர் ஹக்கீம், இளைஞர் அணி அமைப்பாளர் எம்.இளங்கோ, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீமான் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், அதிகாரிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு கோ.புதூர் கற்பகம்நகரில் அமைந்துள்ள சி.எஸ்.ஐ, கல்லூரி மாணவிகள் 500பேருக்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, மாநில பொதுக்குழு உறுப்பினர் ஏ.கே.ஆறுமுகம் ஏற்பாட்டில், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, மாநில தீர்மானக் குழு செயலாளர் அக்ரி கணேசன், முன்னிலையில் அசைவ உணவுகள் வழங்கினார். மேலும் இந்நிகழ்வில்மாவட்ட துணைச் செயலாளர் மூவேந்திரன், பகுதிச் செயலாளர்கள் புண்ணியமூர்த்தி, சரவணன் அம்பலம், அறிவுநிதி, பொதுக்குழு உறுப்பினர் முத்து கணேசன், வட்டச் செயலாளர்கள் மாதவன், புதூர் வேலு, மருது, மகேந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் ஆழ்வார், ராயன், இளைஞரணி நிர்வாகிகள் கேசவன், கார்த்திகேயன், கருப்புராஜ், ஆனந்தகுமார், சித்திக் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், மாணவிகள், கல்லூரி நிர்வாகத்தினர் பங்கேற்றனர்.



திருச்செந்தூரில் மகளிர் விடியல் பயண 5 புதிய பேருந்துகளை தமிழக மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராமஜெயம், ஒன்றிய செயலாளர் ஏ.பி.ரமேஷ், நகர்மன்ற தலைவர் சிவஆனந்தி ரமேஷ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் மணல்மேடு சுதாகர், மாவட்ட அயலக அணி டேனியல், வழக்கறிஞர் அணி வி.பி செல்வகுமார், விளையாட்டு மேம்பாட்டு அணி ஜனகர், நகரச் செயலாளர் வாள் சுடலை ஆகியோர் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் வடக்கு ஒன்றியம் மற்றும் திமுக இளைஞர் அணி சார்பாக தமிழக துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் கூடைப்பந்தாட்ட போட்டியை பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன் முன்னிலையில் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எ.திராவிடன் தலைமையில் நடைபெற்றது. இந்த போட்டியை மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ராஜா மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணக்குமார் கூடைப்பந்தாட்ட போட்டியை தொடங்கி வைத்தார்கள். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆஜிப்கான், செஞ்சுரி செல்வம், வடுகப்பட்டி பேரூராட்சி தலைவர் நடேசன், மாவட்ட இளைஞர் அணி து.அமைப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்கள் ராம்ஜீ, தினேஷ்குமரன், ஒன்றிய துணை அமைப்பாளர்கள் சக்தி, வீரபத்திரன், சுந்தர், கிளைச் செயலாளர் சடையாண்டி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், பிள்ளையார் நத்தம் ஊராட்சியில், ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.290 லட்சத்தில் பிள்ளையார்நத்தம் எப்போதும்வென்றான் சாலை இடையே வழித்தடத்தில் இருந்து இரு வழித்தடமாக அகலப்படுத்தி உறுதிப்படுத்தும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்க்கண்டேயன் கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜன், இம்மானுவேல், ராமசுப்பு, வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்டம் கடையநல்லூர் நகர தி.மு.க சார்பில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லதுரை தலைமையில்,நகர செயலாளர்கள் எஸ்.அப்பாஸ், இத்தாலியன் பீரப்பா முன்னிலையில், 1000 ம் பேர்களுக்கு பிரியாணி பொட்டலங்கள் வழங்கப்பட்டது. நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்துப்பாண்டி,கழக நிர்வாகிகள் ஷேக் தாவுது,பூங்கொடி, சுரேஷ்,முருகன்,காசி,மஸ்தான் அலி, காளிமுத்து,செய்யது மசூது,ரவி, சேப்பிளை அலி,கணேசன்,அயூப் கான்,மகராசா பாஷா, சக்திவேல், ஆஷிக்,ஈஸ்வரன்,அகமது அலி, சாகுல்ஹமீது, பரகத்துல்லா,அகமது அலி, மக்தூம், மணிகண்டன்,பிரகதீஸ் ராஜா, பைசல், முகமதுஅக்பர், பேபி கனி மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்ட மருத்துவ அணி மற்றும் பிரபாகர் கிளினிக் இணைந்து நடத்தும் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு போடி மேல சொக்கநாதபுரம் பேரூராட்சி பகுதியில் மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் போடி முன்னாள் எம்.எல்.ஏ.வும், போடி மேற்கு ஒன்றிய செயலாளர், லட்சுமணன் தலைமை ஏற்று துவக்கி வைத்தார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அரசு மருத்துவர் வடக்கு மாவட்டமருத்துவ அணி தலைவர் டாக்டர் சுகன்யா, கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். டாக்டர்கள் குழுவினர்கள் வருகை புரிந்த அனை வருக்கும் பரிசோதனை செய்து அவர்களுக்கு தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது.

## விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. பிரதிநிதி

# காஜா மைதீன் இல்லத் திருமண வரவேற்பு விழா!

### அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு வாழ்த்துரை!

விருதுநகர், டிச. 5–

விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. பிரதிநிதி காஜா மைதீன் – ரபியா பானு ஆகியோரின் மகனான முகமது ரியாசுதீன், அப்துல் லத்தீப் – நூர்ஜஹான் பீவி ஆகியோரின் மகளான பாத்திமா ரிஸ்வானா அஸீம் ஆகியோர்களுக்கு வருகின்ற 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று SSK கிராண்ட் மண்டபத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மற்றுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு , ஆதிலட்சுமி அம்மாள் ஆகியோர் தலைமையில் திருமண வரவேற்பு விழா நடைபெற உள்ளது.

இவ்விழாவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாணிக்க தாகூர், நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் A.R.R. சீனிவாசன், அசோகன், ஆளூர் ஷாநவாஸ், முன்னாள் ஒன்றிய செயலாளர் சுப்பாராஜ், விருதுநகர் நகர் மன்ற சேர்மன் எஸ்.ஆர்.எஸ்.மாதவன், தி.மு.க. நகர கழக செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், தொழிலதிபர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ஆர்.நாராயணன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். ரமேஷ்குமார், தலைவர் கிருஷ்ணமூர்த்தி, இளைஞர் அணி கிருஷ்ணகுமார்,

விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, வர்த்தக அணி போஸ், சுற்றுச்சூழல் அணி மித்ரு. நாகேந்திரன், சுமதி ராஜசேகர், அசோக் குமார், பொதுக் குழு உறுப்பினர் சுதாகர், தனலட்சுமி துளசிராம், தொ.மு.ச. பொதுச் செயலாளர் ராஜ செல்வம், நேசனல் ராமர், L.திருமாறன், வஹிதா ரஹ்மான், சுபேதா, வை.மலைராஜன், மதன்குமார், அண்ணாதுரை, முரசொலி கந்தசாமி, A.S.K.R. ரமேஷ்குமார், காசிராஜன், மரியராசு மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.